FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102160

1. District : மயிலாடுதுறை PS: ஆடுதுறை (M) Year: FIR No. 01/2026 Date: 19.06.2026
மாவட்டம் காவல்நிலையம் ஊழல் தடுப்பு பிரிவு ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: 106 BNSS and
(ii) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்: 7, 7CA) and 12 of
(iii) Act சட்டம்: PC Act. Sections பிரிவுகள்: Prevention of Corruption Act 1988 as amended by The PC (Amendment) Act - 2018.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் 18.06.2026 நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் 12.00 hrs நேரம் வரை 21.00 hrs.
(b) Information Received at PS. Date : Time :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 19.06.2026 நேரம் 10.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம் 16.00 Hrs.

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக லஞ்சம் தடுப்பு அலுவலரால்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 5 கி.மீ வடக்கில், பும்புகார்
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி அரசினர் கோடு, மாட்டாட்சியர் அலுவலகம் அருகில், மயிலாடுதுறை.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : (b) Father's/ Husband's Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் T. கண்டிதம் தந்தை / கணவர் பெயர் தியாகராஜன்
(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு 59/2026 நாட்டினம் இந்தியர் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் — வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : (g) Address
தொழில் கண்காட்சியாளர் முகவரி (இ.வ.) மயிலாடுதுறை மாவட்டம் / மாவட்டம் அருகில் அருகில்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1. திருமதி. ஹ. சுதா, கண்காணிப்பாளர் (பி.பி), அரசினர் கோடை மாளிகை, மயிலாடுதுறை, 2. திரு. சுந்தரம் 52/26, S/o கண்ணன், மௌன் ரோடு, திருநல்லாடை, மயிலாடுதுறை. 3. திரு. முனிர் வயது 62/26, தி/av. சரிய வேலர், ஓய்வுபெற்ற சொயர், 4. திரு. அரிநாத், 40 மௌன்ஸ்திதி, சிவனையூர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் மயிலாடுதுறை.

வாகனமும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குனரின் உரிய அனுமதியுடனும், மேல் அதிகாரிகளின் ஆணைப்படியும் இன்று காலை 10.00 மணிக்கு புறப்பட்டு மாலை 4.00 மணிக்கு மயிலாடுதுறை வந்தடைந்தோம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)
பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

இன்று 19.06.2026 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு காவல் ஆய்வாளர் M.அருள்பிரியா ஆகிய நான் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது திரு.T. சண்முகம், தனி வட்டாட்சியர்(குடிமை பொருள் வழங்கள்), (பொறுப்பு மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்) வட்டாட்சியர் அலுவலகம், சீர்காழி, மயிலாடுதுறை மாவட்டம் என்பவர் கொடுத்த புகார் அறிக்கையின்படி வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு. அனுப்புநர், திரு.T. சண்முகம், வயது 59/2026, த/பெ. தியாகராஜன், தனி வட்டாட்சியர்(குடிமை பொருள் வழங்கள்), (பொறுப்பு மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்) வட்டாட்சியர் அலுவலகம், சீர்காழி, மயிலாடுதுறை மாவட்டம். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மயிலாடுதுறை. அம்மா, மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி தாலுக்காவில் தனி வட்டாட்சியர்(குடிமை பொருள் வழங்கள்) ஆக பணிபுரிந்துவரும் நான் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.அ1/9499/2026, நாள் 18.06.2026 இல் கண்ட உத்தரவின்படி, மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகம் வந்து, மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் மோட்டார் ஆய்வாளர் மற்றும் அலுவலக அலுவலர்கள் ஒட்டுநர் உரிமம், வாகன பதிவு, பெயர் மாற்றம் செய்தல், ஒட்டுநர் உரிமம் மற்றும் பர்மிட் பதிய வரும் பொதுமக்களிடம் ஒட்டுநர் பயிற்சி பள்ளி மூலமாகவும் இடைத் தரகர்கள் மூலமாகவும் கையூட்டு கேட்டு அவற்றை ஒட்டுநர் பயிற்சி பள்ளி அலுவலர்கள் மூலமாகவும் இடைத் தரகர்கள் மூலமாகவும் மொத்தமாக

(தொடர்ச்சி — தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் தொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
19/06/2026.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
19.06.2026 at 18.30 hrs.

Name: பெயர் M. அருள்பிரியா,
Rank: நிலை தனி வட்டாட்சியர்,
மா.த.ம.க. பிரிவு,
மயிலாடுதுறை.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

கையூட்டாக பெறுவதாக கிடைக்கப்பெற்ற ரகசிய தகவலின்பேரில், மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர் மற்றும் காவலர்களுடன் சேர்ந்து 18.06.2026 ஆம் தேதி மதியம் சுமார் 12.00 மணிமுதல் 21.00 மணிவரை மயிலாடுதுறை, வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின் போது மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.இரா.கதிர்வேலு மற்றும் வட்டார போக்குவரத்து ஆய்வாளர் திரு.ராம்குமார் ஆகியவர்கள் அலுவலகத்தில் ஆஜரில் இல்லாததால் அவர்களுக்கு அடுத்த நிலையில் உள்ள திருமதி. H.சுதா, வயது 43/2026, கண்காணிப்பாளர், அ பிரிவு, வட்டார போக்குவரத்து ஆலுவலகம், மயிலாடுதுறை அலுவலர்களிடம் திடீர் ஆய்வு விபரம் பற்றி தெரிவித்து திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலக அலுவர்கள் மற்றும் தனிநபர்களை விசாரித்து சோதனை செய்யப்பட்டது. திடீர் ஆய்வின்போது 1) திரு. சந்திரன், த/பெ சண்முகம், SK. Driving School மயிலாடுதுறை என்பவர் சரியான முகாந்திரம் தெரிவிக்கமால் வைத்திருந்த ரூபாய் 1,73,000/- பணம், 2) திரு.ஹரிராஜ், த/பெ. ஜெனார்த்தன், GR Vehicle Emission testing centre.- (உரிமையாளர்) மயிலாடுதுறை என்பவர் சரியான முகாந்திரம் தெரிவிக்கமால் வைத்திருந்த ரூபாய் 730/- பணம், 3) திரு. சங்கர், த/பெ சுப்பரமணியன், National driving school(உரிமையாளர்), செம்பனார்கோவில் என்பவர் சரியான முகாந்திரம் தெரிவிக்காமல் வைத்திருந்த ரூபாய் 2,000/- பணம் ஆக மொத்தம் ரூபாய் 1,75,730/- தொகையானது வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் அலுவலக அலுவலர்களுக்கு கையூட்டாக கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் நடவடிக்கை மற்றும் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட மேற்படி பணம் மற்றும் 1) திரு. சந்திரன், த/பெ சண்முகம், SK. Driving School மயிலாடுதுறை என்பவரிடமிருந்து TN50Y 7855 maxicub என்று எழுதப்பட்ட M. SARATHKUMAR SK DRIVING SCHOOL என்று அச்சிடப்பட்ட அட்டையுடன் கூடிய Registration certificate, Tax receipt, certificate of fitness, pollution under control certificate, insurance, மற்றும் form ACC, part-I அத்தாட்சி கடிதம், form PC, ஆகியவை அடங்கிய கோப்பு, 2) மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலக பணியாளர்கள் பண விபர பதிவேடு- 2026, 3) மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலக நிரந்தர பணியாளர்களின் வருகை பதிவேடு, 4) மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலக பாண்டன் பணியாளர்களின் வருகை பதிவேடு 2026 5) மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலக ஒப்பந்த பணியாளர்களின் வருகை பதிவேடு 2026 6) மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலக அலுவலர்கள் காள தாமத வருகை பதிவேடு 2026, 7) மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலக இயக்கப்பதிவேடு(இதில் இன்று 18.06.2026 மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் அலுவலில் இல்லாத வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆகியவர்களின் குறிப்பு எதுவும் பதிவு செய்யப்பட்டவில்லை) 8) மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இன்று 18.06.2026 ஆம் தேதி செய்யப்பட்ட பணி விபரங்களை (வாகன உரிமை மாற்றம் -4, புதிய அனுமதி சீட்டு - 1, வாகன பதிவு சான்றில் உரிமையாளரின் அலைபோசி எண்ணை பதிவேற்றம் செய்தல்- 4, சரக்கு வாகனத்தின் Tax clearance - 1) ஆகிய ஆவணங்கள் மற்றும் 1) திரு. சந்திரன், வயது 52/2026, த/பெ சண்முகம், மெயின் ரோடு, சித்தர்காடு, மயிலாடுதுறை, 2)

திரு. சங்கர் வயது62/2026, த/பெ சுப்பிரமணியன், செம்பனார்கோவில், 3) திரு.ஹரிராஜ், த/பெ ஜனார்த்தன், 2/61, சீனிவாசபுரம், மயிலாடுதுறை ஆகியவர்கள் தானாக முன்வந்து கொடுத்த வாக்குமூலங்கள் ஆகிவற்றுடன் எனது புகார் மனுவையும் இணைத்து தங்களிடம் ஆஜர் செய்கிறேன். மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்குள் தொகையுடன் தனிநபர்களை அனுமதித்த திருமதி. H.சுதா, வயது 43/2026, கண்காணிப்பாளர், அ பிரிவு, வட்டார போக்குவரத்து ஆலுவலகம், மயிலாடுதுறை அவர்கள் மீதும் மேலும் தொகை கைப்பற்றப்பட்ட 1) திரு. சந்திரன், வயது 52/2026, த/பெ சண்முகம், மெயின் ரோடு, சித்தர்காடு, மயிலாடுதுறை, 2) திரு. சங்கர் வயது62/2026, த/பெ சுப்பிரமணியன், செம்பனார்கோவில், 3) திரு.ஹரிராஜ், த/பெ ஜனார்த்தன், 2/61, சீனிவாசபுரம், மயிலாடுதுறை ஆகியவர்கள் மீதும் சட்டப்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன். (ஒப்பம்) (தி. சண்முகம் 19.06.2026) தனி வட்டாட்சியர்(குடிமை பொருள் வழங்கள்), (பொறுப்பு மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்), வட்டாட்சியர் அலுவலகம், சீர்காழி, மயிலாடுதுறை மாவட்டம். திடீர் ஆய்வு செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் மகஜர்- இன்று 18.06.2026 ஆம் தேதி மதியம் சுமார் 12.00 மணிமுதல் மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை தாலுக்கா, பூம்புகார் மெயின் ரோட்டில், தெற்கு பக்கம் வடக்கு பார்த்த வாசல்வழி உள்ள மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலகத்தை திரு.T. சண்முகம், வயது 59/2026, த/பெ. தியாகராஜன், தனி வட்டாட்சியர்(குடிமை பொருள் வழங்கள்), வட்டாட்சியர் அலுவலகம், சீர்காழி, மயிலாடுதுறை மாவட்டம் அவர்கள் தலைமையில் மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திருமதி.R.சர்மு அவர்கள், மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.ம.அருள்பிரியா மற்றும் மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு காவலர்கள் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் ஆய்வின் செயல்முறை நடவடிக்கைகள் குறித்து தற்காலிக மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர் திரு.T. சண்முகம், வயது 59/2026, த/பெ. தியாகராஜன், தனி வட்டாட்சியர்(குடிமை பொருள் வழங்கள்), வட்டாட்சியர் அலுவலகம், சீர்காழி, மயிலாடுதுறை மாவட்டம் அவர்களால் தயார் செய்யப்படும் திடீர் ஆய்வு செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் மகஜர் விபரம் பின்வருமாறு. மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் மோட்டார் ஆய்வாளர் மற்றும் அலுவலக அலுவலர்கள் ஓட்டுநர் உரிமம், வாகன பதிவு, பெயர் மாற்றம் செய்தல், ஓட்டுநர் உரிமம் மற்றும் பர்மிட் பதிய வரும் பொதுமக்களிடம் ஓட்டுநர் பயிற்சி பள்ளி மூலமாகவும் இடைத் தரகர்கள் மூலமாகவும் கையூட்டு கேட்டு அவற்றை ஓட்டுநர் பயிற்சி பள்ளி அலுவலர்கள் மூலமாகவும் இடைத் தரகர்கள் மூலமாகவும் மொத்தமாக கையூட்டாக பெறுவதாக மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த இரகசியதகவலினை இன்று 18.06.2026 ஆம் தேதி தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலருக்கு தகவல் தெரிவித்ததின் பேரில், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் கேட்டுக்கொண்டதன் பேரில், மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் பேரில் சீர்காழி தனிவட்டாட்சியர் (கு.பொ.வ) ஆகிய நான் மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு 11.00 மணிக்கு வந்தும், அங்கிருந்து திருமதி.ம.அருள்பிரியா, காவல் ஆய்வாளர் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்கள் சகிதம் அரசு வாகனத்தில் மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து

Scanned with CamScanner

18.06.2026 ஆம் தேதி 11.30 மணிக்கு புறப்பட்டு, மயிலாடுதுறை, பூம்புகார் மெயின்ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்காக செல்லும் தார் ரோட்டின் தெற்கு பக்கம் வடக்கு பார்த்த வாசல்வழி உள்ள மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு 12.00 மணிக்கு வந்து, மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இருந்த வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.இரா.கதிர்வேலு மற்றும் வட்டார போக்குவரத்து ஆய்வாளர் திரு.ராம்குமார் அவர்கள் அலுவலகத்தில் ஆஜரில் இல்லாததால் அவர்களுக்கு அடுத்த நிலையில் உள்ள திருமதி. H.சுதா, வயது 43/2026, கண்காணிப்பாளர், அ பிரிவு, வட்டார போக்குவரத்து ஆலுவலகம், மயிலாடுதுறை அலுவலர்களிடம் திடீர் ஆய்வு விபரம் பற்றி தெரிவித்து திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட விபரம் பின்வருமாறு. மேற்படி மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலகமானது, மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை தாலுக்கா, பூம்புகார் மெயின்ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்காக செல்லும் தார் ரோட்டின் தெற்கு பக்கம் வடக்கு பார்த்த வாசல் வழி உள்ள மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலகம் உள்ளது. மேற்படி அலுவலகத்தின் வடக்கு பக்கம் இரண்டு பெரிய இரும்பு கேட்டும், ஒரு சிறிய இரும்பு கேட்டும் உள்ளது. மேற்படி வட்டார போக்குவரத்து அலுவலகமானது வடக்கு பார்த்த வாசலுடனும், முன்பக்கம் போர்டிகோவும், அதற்கு அடுத்ததாக படிகட்டுகளும், அதற்கு அடுத்தார்போல் உள்பக்கம் வட்டார போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளர் இருக்கையும், அதற்கு மேற்கே 'இ' பிரிவு கண்காணிப்பாளரின் கண்ணாடி அறையும், அதற்கு அடுத்ததாக வராண்டாவும், அதற்கு அடுத்ததாக வட்டார போக்குவரத்து அலுவலரின் அறையும், அறையில் வடக்கு பார்த்து அமருமாறு இருக்கைகளும், அறையில் மேற்கே கழிவறையும் உள்ளது. வட்டார போக்குவரத்து அலுவலரின் அறைக்கு கிழக்கே மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை –I அவர்களின் அறையும், அறையில் வடக்கு பார்த்து அமருமாறு இருக்கைகளும், அறையில் கிழக்கு பக்கம் கணினி அறையும் உள்ளது. மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளரின் அறையின் வாசலில் உள்ள கண்ணாடி கதவு இரும்பு சங்கிலியார் சுற்றி பூட்டு போடப்பட்டுள்ளது மோட்டார் வாகன ஆய்வாளரின் அறைக்கு கிழக்கே ஓட்டுநர் உரிமத்திற்கான புகைப்படம் எடுக்கும் அறையும், அதற்கு வடக்கே பழகுநர் ஓட்டுநர் உரிமம் வழங்கும் அறையும், அதற்குள்ளேயே வாகன பதிவு தொடர்பான அறையும் உள்ளது. வட்டார போக்குவரத்து அலுவலரின் அறைக்கு மேற்கே வலது பக்கம் தட்டச்சர் அறையும், அடுத்ததாக பதிவுறு எழுத்தரின் அறையும், ஆட்டோ தொடர்பான பணிகள் அறையும், அடுத்தாக "அ" பிரிவு கண்காணிப்பாளர் அறையும் அதற்கு எதிரே ஆவணங்கள் இருப்பு அறையும், அதற்கு அடுத்ததாக கழிவறைகளும் உள்ளது. வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் எதிரே பொது மக்கள் அமருவதற்காக கட்டிடம் உள்ளது. வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் பின்பு ஓட்டுநர் உரிமத்திற்கான தேர்வு தளம் உள்ளது. வட்டார போக்குவரத்து அலுவலரின் அறைக்கு எதிரில் மாடி செல்லும் படிகட்டுகளும், மேல் மாடி கட்டிடம் எதுவும் இல்லாமல் காலியாக உள்ளது. மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தனி வட்டாட்சியர் மற்றும் மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குழுவினர் மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலகம் மற்றும் அலுவலக வளாகத்திற்குள் இருந்தவர்களிடமும் தங்களையும், தங்களுடன் வந்தவர்களையும் அறிமுகம் செய்தபோது, மேற்படி அலுவலகத்தில் இருந்தவர்கள் அவரவர் இடத்தை விட்டு நழுவ முயற்சித்தார்கள். சீர்காழி தனி வட்டாட்சியர் அவர்கள் அங்கிருந்தவர்களை நிறுத்தி விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் அவர்களை தனித்தனியாக விசாரிக்கப்பட்டது. திடீர் ஆய்வின்போது மயிலாடுதுறை

வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்குள் 1)திருமதி.சுதா, கண்காணிப்பாளர் அ- பிரிவு, வட்டார போக்குவரத்து அலுவலகம், 2)திரு.ராஜசேகரன், கண்காணிப்பாளர், இ-பிரிவு, 3) திரு.தமிழரசன், உதவியாளர், அ4, 4) திரு. A.ஜார்ஜ் பெர்ணான்டஸ், உதவியாளர், அ2, 5) திருமதி. காயத்திரி, உதவியாளர், இ2, 6) திருமதி. அலமேலுமங்கை, தட்டச்சர், அ5, 7)திருமதி.T.சீதாலட்சுமி, இளநிலை உதவியாளர், இ3, 8) செல்வி. வீணா, கணக்கர், இ1, 9) திருமதி. சின்னதாயம்மாள், இளநிலை உதவியாளர், அ1, 10) திரு. முருகன், அலுவலக உதவியாளர், 11) திரு. மூர்த்தி, அலுவலக உதவியாளர், 12) திரு. விக்னேஷ், Bonton Staff. தனிநபர்கள் 13) ஹரிராஜ்,த/பெ. ஜெனார்த்தன், GR Vehicle Emission testing centre. மயிலாடுதுறை, 14) திரு.மூர்த்தி, த/பெ விங்கப்பன், செம்பனார்கோவில், 15) திரு. கிருஷ்ணன், த/பெ ரமேஷ், திருக்கடையூர், 16) திரு. மதன்,த/பெ தாமரைசெல்வன், திருநன்றியூர், 17) திரு. சங்கர், த/பெ சுப்பரமணியன், National driving school, செம்பனார்கோவில், 18) திருமதி. மீனா, க/பெ. பிரேம்குமார், TNSTC உதவியாளர், மயிலாடுதுறை, 19) திரு. சந்திரன், த/பெ சண்முகம், SK. Driving School மயிலாடுதுறை, 20) திரு. காலிதாசன், த/பெ பாலசுப்பிரமணியன், கூட்டுரவு நகர், மயிலாடுதுறை, 21) திரு. நவணிதகிருஷ்ணன், த/பெ வேள்ளிமைல, முருகமங்களம்,(Balu driving school mayilduthurai), 22) திரு. இன்பராஜ் த/பெ கோவிந்தராஜ், மயிலாடுதுறை SK driving school மயிலாடுதுறை, 23) திரு. சிவகுரு. த/பெ சிவதாஸ், மயிலாடுதுறை 24) திரு. சிவகுமார், த/பெ சேகர், பணியாளர் GR Vehicle Emission testing centre. மயிலாடுதுறை. 25)திரு ரமேஷ், த/பெ ராமமூர்த்தி, மயிலாடுதுறை (Karthi driving school) 26) திரு.வசந்த், த/கெ கதிரவன், கருவலளக்கரை (Karthi driving school), 27) திரு. முகமதுசலீம், த/பெ முத்தலீப், வானதிராஜபுரம் (GR Vehicle Emission testing centre), 28)திரு.பசீர்அகமது, த/பெ முகமதுசலீம், வானதிராஜபுரம் (GR Vehicle Emission testing centre), 29) திரு.அமுருதீன் த/பெ முகமதுகாசீம் கடலங்குடி, 30) செல்வி. சிவபிரியா, த/பெ குமரவேலு, மன்னன்பந்தல், (Gnanam driving school, 31) திரு.குமரவேல், த/பெ செல்லப்பன், மன்னன்பந்தல், (Gnanam driving school) ஆகியோர் இருந்தனர். விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் வட்டார போக்குவரத்து அலுவலகம் மற்றும் அலுவலக வளாகம் சோதனை செய்யப்பட்டது. சோதனையில் சரியான முகாந்திரம் கூறிய தொகை மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலக அலுவலர்கள் தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்திருந்த தொகையும் சரியாக இருந்தவர்களிடம் அவர்களது தொகை திரும்ப ஒப்படைக்கப்பட்டது, சரியான முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்துடன் கூடிய கையூட்டு தொகையானது குற்றமுறு நடவடிக்கையின் மூலம் வட்டார போக்கவுரத்து அலுவலர், மோட்டார் வாகன ஆய்வாளர் மற்றும் அலுவலக ஊழியர்களுக்கு கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் கீழ்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் **ரூபாய்.1,75,730/-ம்** திடீர் ஆய்வின் போது மேல் நடவடிக்கைக்காக மகஜரில் கைப்பற்றப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

Scanned with OKEN Sc

வ. எண்	பெயர், பதவி மற்றும் முகவரி	திரும்ப ஒப்படைக்கப்பட்ட ரூபாய்	கைப்பற்றப்பட்ட ரூபாய்
1	திருமதி.சுதா, கண்காணிப்பாளர் அ பிரிவு, வட்டார போக்குவரத்து அலுவலகம்,	89	-
2	திரு.ராஜசேகரன், கண்காணிப்பாளர், இ-பிரிவு,	436	-
3	திரு.தமிழரசன், உதவியாளர், அ4,	250	
4	திரு. A.ஜார்ஜ் பெர்ணான்டஸ், உதவியாளர்,	800	-
5	திருமதி. காயத்திரி, உதவியாளர், இ2.	--	-
6	திருமதி. அலமேலுமங்கை, தட்டச்சர்,	250	-
7	திருமதி.T.சீதாலட்சுமி, இளநிலை உதவியாளர், இ3,	650	-
8	செல்வி. வீணா, கணக்கர், இ1,	410	-
9	திருமதி. சின்னதாயம்மாள், இளநிலை உதவியாளர், அ1,	30	-
10	திரு. முருகன், அலுவலக உதவியாளர்,	300	-
11	திரு. மூர்த்தி, அலுவலக உதவியாளர்,	260	
12	திரு. விக்னேஷ், Bonton Staff.	250	
13	திரு.ஹரிராஜன்,த/பெ. ஜெனார்த்தன், GR Vehicle Emission testing centre. மயிலாடுதுறை,	730	730
14	திரு.மூர்த்தி, த/பெ லிங்கப்பன், செம்பனார்கோவில்,	5200	
15	திரு. கிருஷ்ணன், த/பெ ரமேஷ், திருக்கடையூர்	--	--
16	திரு.மதன்,த/பெதாமரைசெல்வன், திருநன்றியூர்,	250	-
17	திரு. சங்கர், த/பெ சுப்பரமணியன், National driving school, செம்பனார்கோவில்,	2000	2000
18	திருமதி. மீனா, க/பெ. பிரேம்குமார், TNSTC உதவியாளர், மயிலாடுதுறை,	300	-
19	திரு. சந்திரன், த/பெ சண்முகம், SK. Driving School மயிலாடுதுறை,	1,73,000	1,73,000
20	திரு. காலிதாசன், த/பெ பாலசுப்பிரமணியன், கூட்டுரவு நகர், மயிலாடுதுறை,	6600	-
21	திரு.நவநிதகிருஷ்ணன், த/பெ வேள்ளிமைல, முருகமங்களம்,(Balu driving school mayilduthurai),	150	

Scanned with OKEN Scanner

22	திரு. இன்பராஜ் த/பெ கோவிந்தராஜ், மயிலாடுதுறை SK driving school மயிலாடுதுறை,	230	
23	திரு. சிவகுரு, த/பெ சிவதாஸ், மயிலாடுதுறை	80	
24	திரு. சிவகுமார், த/பெ சேகர், பணியாளர் GR Vehicle Emission testing centre. மயிலாடுதுறை.	--	
25	திரு ரமேஷ், த/பெ ராமமூர்த்தி, மயிலாடுதுறை (Karthi driving school)	160	
26	திரு.வசந்த், த/பெ கதிரவன், கருவலளக்கரை (Karthi driving school),	100	
27	திரு. முகமதுசலீம், த/பெ முத்தலீப், வானதிராஜபுரம் (GR Vehicle Emission testing centre),	110	
28	திரு.பசீர்அகமது, த/பெ முகமதுசலீம், வானதிராஜபுரம் (GR Vehicle Emission testing centre),	110	
29	திரு.அமுருதீன் த/பெ முகமதுகாசீம் கடலங்குடி	--	
30	செல்வி. சிவபிரியா, த/பெ குமரவேலு, மன்னன்பந்தல், (Gnanam driving school,	320	
31	திரு.குமரவேல், த/பெ செல்லப்பன், மன்னன்பந்தல், (Gnanam driving school)	3100	
	மொத்தம்	**1,96,165**	**1,75,730**

இந்த தீடீர் சோதனையின் போது மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இருந்த வெளி நபர்களை விசாரித்ததிலிருந்து அவர்கள் SK. Driving School, GR Vehicle Emission testing centre. Karthik driving school, ஆகியவற்றில் பணிபுரிபவர்களாகவும் மேலும் இடைத்தரகராகவும் இருப்பது தெரியவந்ததால் திடீர் ஆய்வு அலுவலர் அவர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு அதிகமாக தொடர்புடைய ஒட்டுநர் பயிற்சி பள்ளிகளாகிய SK. Driving School, GR Vehicle Emission testing centre. Karthik driving school ஆகிய அலுவலகங்களை சோதனை செய்ய வேண்டியது அவசியமாக இருப்பதால், அதற்காக மேற்கண்ட Driving School அலுவகத்திற்கு காவலரை நியமிக்க வேண்டும் என்று ஆய்வாளரை கேட்டுக்கொண்டதன் பேரில் காவலர்களை தனி தனியாக நியமிக்கப்பட்டது. மேற்படி மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்குள் இருந்து ஒட்டுநர் பயிர்ச்சி பள்ளியை சேர்ந்த 1) திரு. சந்திரன், த/பெ சண்முகம், SK. Driving School மயிலாடுதுறை, என்பவரை விசாரித்து அவரை சோதணை செய்ய அவர் அணிந்திருந்த பேண்டின் வலது மற்றும் இடது பக்கமிருந்த பாக்கெட்டிலிருந்து தனி தனியாக எடுத்து மொத்தமாக ரூபாய் 1,73,000/- பணத்தை (500x 346=1,73,000/-) ஆஜர் செய்தவரிடம் தொகை குறித்து விளக்கம் கேட்க, அவர் தான்

Permit clearance certificate ல் கையொப்பம் செய்வதற்காக அதற்கான ஆவணங்களை SK driving schoolல் பெற்று RTO அலுவலகம் வந்ததாகவும் தன்னிடம் இருக்கும் தொகையானது இன்று காலை நகை விற்ற பணம் என்றும் கூறியவரிடம் அதற்கான ஆவணம் எதுவும் இல்லை என்பதால் அவரால் சரியான முகாந்திரம் கூற இயலாத தொகை ரூபாய் 1,73,000/- பணமானது வட்டார போக்குவரத்து அலுவலருக்கு கையூட்டாக கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி ரூபாய் 1,73,000/- திடீர் சோதனை நடவடிக்கை மற்றும் மகஜரில் கைப்பற்றப்பட்டது. 2) திரு.ஹரிராஜ், த/பெ. ஜெனார்த்தன், GR Vehicle Emission testing centre.- (உரிமையாளர்) மயிலாடுதுறை என்பவரை விசாரித்து அவரை சோதனை செய்ய அவர் அணிந்திருந்த பேண்டின் வலது பக்க பாக்கெட்டிலிருந்த பர்சிலிருந்து ரூபாய் 730/- பணத்தை (500x1 = 500, 100x2= 200, 20x1=20, 10x1=10 மொத்தம் ரூபாய் 730) ஆஜர் செய்தவரிடம் தொகை குறித்து விளக்கம் கேட்க, அவர் தான் GR Vehicle Emission testing centre. என்ற பெயரில் அலுவலகம் நடத்தி வருவதாகவும் திரு.முகமது சலீம் என்பவரின் இருசக்கர வகனத்தை பதிவு செய்ய RTO வை பார்க்க வந்ததாக கூறியவர் வைத்திருந்த தொகையானது வட்டார போக்குவரத்து அலுவலருக்கு கையூட்டாக கொடுப்பதற்காக வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி ரூபாய் 730/- திடீர் சோதனை நடவடிக்கை மற்றும் மகஜரில் கைப்பற்றப்பட்டது. 3) திரு. சங்கர், த/பெ சுப்பரமணியன், National driving school, செம்பனார்கோவில் என்பவரை விசாரித்து அவரை சோதனை செய்ய அவர் அணிந்திருந்த பேண்டின் வலது பக்க பாக்கெட்டிலிருந்து ரூபாய் 2000/- பணத்தை (500x3 = 1500, 200x1= 200, 100x3=300, மொத்தம் ரூபாய் 2000) ஆஜர் செய்தவரிடம் தொகை குறித்து விளக்கம் கேட்க, அவர் தான் செம்பனார்கோவிலில் உள்ள National driving school. உரிமையாளர் என்றும் நாளை எத்தனை வாகனம் Test க்கு அழைத்து வரலாம் என்று கேட்பதற்காக வந்ததாக கூறியவர் வைத்திருந்த தொகைக்கு சரியான முகாந்திரம் கூறாததால் மேற்படி தொகையானது வட்டார போக்குவரத்து அலுவலருக்கு கையூட்டாக கொடுப்பதற்காக வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி ரூபாய் 2000/- திடீர் சோதனை நடவடிக்கை மற்றும் மகஜரில் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின் தொடர்ச்சியாக திரு. சந்திரன், த/பெ சண்முகம், SK. Driving School மயிலாடுதுறை என்பவரை அழைத்துக்கொண்டு விஜிலென்ஸ் குழுவினருடன் மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலகத்திலிருந்து சுமார் 500 மீட்டர் தொலைவில் மயிலாடுதுறை பூம்புகார் செல்லும் ரோட்டில் வடக்கு பக்கம் தெற்கு பார்த்த வாசலுடைய SK. Driving School அலுவலகத்தில் மதியம் சுமார் 01.00 மணியளவில் அலுவலகத்தில் இருந்த திரு. காளிதாஸ் என்பரை விசாரிக்க அவர் திரு. சந்திரன், த/பெ சண்முகம், என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆவணம் தங்களது அலுவலகத்திலிருந்து கொடுக்கப்பட்டது என்று கூறினார். மேற்படி அலுவலகத்தை சோதனை செய்ய சந்தேகப்படியான எதுவும் இல்லை என்பதால், எதுவும் கைபற்றப்படவில்லை. மேலும் அலுவலகத்தை நல்ல நிலையில் திரு. காளிதாஸ் என்பவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் இந்த திடீர் ஆய்வில் திரு.ஹரிராஜன்,த/பெ. ஜெனார்த்தன், GR Vehicle Emission testing centre. மயிலாடுதுறை என்பவரை அழைத்துக்கொண்டு GR Vehicle Emission testing centre. விஜிவென்சு குழுவினருடன் மயிலாடுதுறை வட்டார

போக்குவரத்து அலுவலகத்திலிருந்து சுமார் 500 மீட்டர் தொலைவில் மயிலாடுதுறை பூம்புகார் செல்லும் ரோட்டில் வடக்கு பக்கம் கிழக்கு பார்த்த வாசலுடைய GR Vehicle Emission testing centre. அலுவலகத்தில் மதியம் சுமார் 01.20 மணியளவில் அலுவலகத்தில் பணிபுரியும் செல்வி. வினோதா மற்றும் உரிமையாளரான ஹரிராஜன் என்பவர் முன்னிலையில் அலுவலகத்தை சோதனை செய்ய சந்தேகப்படியான எதுவும் இல்லை என்பதால், எதுவும் கைபற்றப்படவில்லை. மேலும் அலுவலகத்தை நல்ல நிலையில் செல்வி. வினோதா என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் இந்த திடீர் ஆய்வில் வட்டார போக்குவரத்து அலுவலகத்திலிருந்து சுமார் 800 மீட்டர் தொலைவில் மயிலாடுதுறையிலிருந்து பூம்புகார் செல்லும் ரோட்டில் தெற்கு பக்கம் தரைதளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய கார்த்தி ஓட்டுனர் பயிர்ச்சி பள்ளி அலுவலகத்தை மதியம் 01.45 மணிக்கு அலுவலகத்தில்லிருந்த பணியாளர்கள் மற்றும் உரிமையாளர் திரு. கார்த்திகேயன் அவர்கள் முன்னிலையில் அலுவலகத்தை சோதனை செய்யப்பட்டது சோதனையில் எதுவும் கைபற்றப்படவில்லை, மேலும் அலுவலகத்தை நல்ல நிலையில் உரிமையாளர் திரு. கார்த்திகேயன் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது. பிறகு மீண்டும் குழுவினருடன் வட்டார போக்குவரத்து அலுவகம் வந்து திடீர் ஆய்வு தொடர்ந்து செய்யப்பட்டது. மேலும் திடீராய்வின் போது 1)திருமதி.சுதா, கண்காணிப்பாளர் அ பிரிவு என்பவரை விசாரிக்க அவர் பணியாளர்கலின் பண விபர பதிவேட்டில் இன்றைய தினம் ரு.350 கொண்டுவந்ததாக பதிவு செய்துள்ளவர் விசாரணையின் போது ரு89 மட்டுமே எடுத்து ஆஜர் செய்தார். 2) திருமதி.T.சீதாலட்சுமி, இளநிலை உதவியாளர், இ3, என்பவரை விசாரிக்க அவர் பணியாளர்கலின் பண விபர பதிவேட்டில் இன்றைய தினம் ரு.1000 கொண்டுவந்ததாக பதிவு செய்துள்ளவர் விசாரணையின் போது ரு650 மட்டுமே எடுத்து ஆஜர் செய்தார்.3) திரு. விக்னேஷ், Bonton Staff. என்பவரை விசாரிக்க அவர் பணியாளர்கலின் பண விபர பதிவேட்டில் இன்றைய தினம் ரு550 கொண்டுவந்ததாக பதிவு செய்துள்ளவர் விசாரணையின் போது ரு250 மட்டுமே எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி மூன்று அலுவலர்களும் மேற்படி தொகை மாறுபடுவது குறித்து சரியான விளக்கம் தெரிவிக்கவில்லை இருப்பினும் அவரவர் தொகை அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி சரியான முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்துடன் கூடிய கையூட்டு தொகையானது வட்டார போக்குவரத்து அலுவலர், மோட்டார் வாகன ஆய்வாளர் மற்றும் வட்டார போக்குவரத்து ஊழியர்களுக்கு கையூட்டாக கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் என்பதன் அடிப்படையில் மேற்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் ரூபாய்.1,75,730/- மற்றும் 1) திரு. சந்திரன், த/பெ சண்முகம், SK. Driving School மயிலாடுதுறை என்பவரிடமிருந்து TN50Y 7855 maxicub என்று எழுதப்பட்ட M. SARATHKUMAR SK DRIVING SCHOOL என்று அச்சிடப்பட்ட அட்டையுடன் கூடிய Registration certificate, Tax receipt, certificate of fitness, pollution under control certificate, insurance, மற்றும் form ACC, part-I அத்தாட்சி கடிதம், form PC, ஆகியவை அடங்கிய கோப்பு, 2) மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலக பணியாளர்கள் பண விபர பதிவேடு- 2026, 3) மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலக நிரந்தர பணியாளர்களின் வருகை பதிவேடு, 4) மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலக பாண்டன் பணியாளர்களின் வருகை பதிவேடு 2026 5) மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலக ஒப்பந்த பணியாளர்களின் வருகை பதிவேடு 2026 6) மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலக அலுவலர்கள் கால தாமத வருகை பதிவேடு 2026, 7) மயிலாடுதுறை

வட்டார போக்குவரத்து அலுவலக இயக்கப்பதிவேடு(இதில் இன்று 18.06.2026 மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் அலுவலில் இல்லாத வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆகியவர்களின் குறிப்பு எதுவும் பதிவு செய்யப்பட்டவில்லை) 8) மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இன்று 18.06.2026 ஆம் தேதி செய்யப்பட்ட பணி விபரங்களை (வாகன உரிமை மாற்றம் -4, புதிய அனுமதி சீட்டு - 1, வாகன பதிவு சான்றில் உரிமையாளரின் அலைபோசி எண்ணை பதிவேற்றம் செய்தல்- 4, சரக்கு வாகனத்தின் Tax clearance - 1). மேற்படி திடீர் ஆய்வின்போது சீர்காழி தனி வட்டாட்சியர் (தற்காலிக மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர்) அவர்கள் 1) திரு. சந்திரன், வயது 52/2026, த/பெ சண்முகம், மெயின் ரோடு, சித்தர்காடு, மயிலாடுதுறை, 2) திரு. சங்கர் வயது62/2026, த/பெ சுப்பிரமணியன், செம்பனார்கோவில், 3) திரு.ஹரிராஜ், த/பெ ஜனார்த்தன், 2/61, சீனிவாசபுரம், மயிலாடுதுறை, ஆகிய மூவரையும் தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். இந்த திடீர் சோதனை செயல்முறை நடவடிக்கை மற்றும் மகஜர் இன்று 18.06.2026 ஆம் தேதி இரவு 21.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மாண்பமை அம்மா. இந்த புகார் மனுவை தனி வட்டாட்சியர் (குடிமை பொருள் வழங்கள்) பொறுப்பு மாவட்ட துணை ஆய்வு குழு அலுவலர், சீர்காழி, மயிலாடுதுறை மாவட்டம் என்பவரிடமிருந்து 19.06.2026 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு பெற்று, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குனரகத்திலிருந்து உரிய அனுமதி பெற்றும், சட்ட ஆலோசனை பெற்றும் மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணப்பு பிரிவு குற்ற எண். 01/2026, சட்ட பிரிவு 106 BNSS AND 7, 7(A) and 12 of The Prevention of Corruption Act 1988 as amended by The Prevention of Corruption (Amendment) Act in 2018 இன் படி இன்று 19.06.2026 ஆம் தேதி மாலை 16.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யப்பட்டது.

(ம. அருளபிரியா)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
மயிலாடுதுறை.
19/06/2026

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார் அறிக்கை, திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் அசல், எதிரிகள் 1) திரு. சந்திரன், வயது 52/2026, த/பெ சண்முகம், மெயின் ரோடு, சித்தர்காடு, மயிலாடுதுறை, 2) திரு. சங்கர் வயது62/2026, த/பெ சுப்பிரமணியன், செம்பனார்கோவில், 3) திரு.ஹரிராஜ், த/பெ ஜனார்த்தன், 2/61, சீனிவாசபுரம், மயிலாடுதுறை ஆகியவர்களின் வாக்குமூலங்கள் அசல் ஆகியவற்றை மாண்புமிகு மாவட்ட/அமர்வு நீதிபதி மற்றும் சிறப்பு நீதிபதி, மாவட்ட அமர்வு நீதிமன்றம்/ சிறப்பு நீதிமன்றம், மயிலாடுதுறை அவர்களுக்கு பணிந்து சமர்பித்தும், இதர நகல்கள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

(ம. அருளபிரியா)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
மயிலாடுதுறை.
19/06/2026.